Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　PEOPLES DAILY　　மக்கள் தினசரி

நாதம்: 02　　திருவள்ளுவர் ஆண்டு 2022　　புரட்டாதி 09　　( 25 - 09 - 1991 )　　புதன்கிழமை　　ஓசை: 219

## விரிவுரைகள் யாவும் தற்காலிக இடைநிறுத்தம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெற்றுவரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் அனைத்தும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் புதிய கற்கை நெறிகளுக்கான பதிவு நடவடிக்கைகளும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சில மாணவர்களுக்கான கற்கை நெறிகள் தொடர்பாக நாவல தலைமை வளாகத்தில் நடைபெறும் விரிவுரைகளில் பங்குபற்றுமாறு கடித மூலம் தலைமை வளாகம் மாணவர்களைக் கேட்டுள்ளது. மேற்படி இடைநிறுத்தலுக்கான அறிவுறுத்தல்கள் நாவல தலைமை வளாகத்திற்கு சென்றிருந்த யாழ். பிராந்திய (4ம்பக்கம்பார்க்க)

# கடிதம் பேச்சுக்கு உகந்ததல்ல:

# நேரில் வாருங்கள் பேசுவோம்!

## மூன்று நாள் மோதலில் 16 புலிகள் வீரமரணம்

மணலாறு, மாவட்டத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் நடந்து வரும் தீவிரமான போரில் கடந்த மூன்று நாட்களில் புலிகள் தரப்பில் பதினாறு வீர வேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர். கடந்த ஞாயிறன்று (22-09-91)

★ டானி (சின்னத்துரை வசந்தகுமார், உடுத்துறை),
★ சங்கீதா (வசந்தகுமாரி நடராசா, நவாலி வடக்கு),
★ திபாகர் (மாணிக்கம் மகேஸ்வரன், துறைநீலாவணை),
★ வினோத் (இராசையா யுவராசா, வத்திராயன் வடக்கு),
★ சனத் (செபஸ்தியாம்பிள்ளை ஜெபசீலன், முள்ளியான்),
★ தர்மிலா (மாலா மயில்வாகனம், ஆழியவளை),
★ சுமங்கலி (மலிலிகா விஜயரட்ணம், இயக்கச்சி),
★ ரஜினி (குயின்பத்மா 4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவுக்கு மகேந்திரராசா அழைப்பு

(யாழ்ப்பாணம்)

'ஒரு உருப்படியான தீர்வுத்திட்டத்தை நோக்கிய கருத்துப்பரிமாற்றங்களும், விளக்கங்களும் கடிதமூலம் வைத்துக்கொள்வது நடைமுறைக்குச் சிரமமானது. அத்துடன் சமாதானப்பேச்சுக்கள் தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல. நேரடியாகச் சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே சிறந்த வழிமுறையாகும்! இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, உல்லாசப் பிரயாண,கைத்தொழிற்றுறை அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமரசப் பேச்சிற்கான அடிப்படை அம்சங்கள் குறித்து தலைவர் பிரபாகரனுக்கு அமைச்சர் தொண்டமான் அனுப்பிய கடிதத்திற்கு பதிலளிக்கும் முகமாகவே இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

திரு. மகேந்திரராசா அனுப்பிய கடிதத்தின் முழு விபரமும் வருமாறு.

அன்புடையீர்!

எமது இயக்கத் தலைவர் திரு. வே பிரபாகரனுக்கு நீங்கள் 27-08-1991-இல் அனுப்பிய கடிதத்தைப் பெற்றுக் கொண்டோம். கடிதம் கிடைக்கப்பெற்ற தகவலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக உங்களுக்கு அறியத் தந்தோம். நீங்கள் இந்தியா சென்றிருந்ததால் உடன்பதில் எழுதுவது தாமதமாகியது.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் முன்வைத்த யோசனைகளை நாம் கருத்தில் எடுத்துக் கொண்டோம். அரசியல் தீர்வு குறித்து எமது இயக்கத்தின் கருத்துக்களையும் கேட்டிருந்தீர்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்கு

(வல்வெட்டித்துறை)

'வல்வெட்டித்துறைப் பகுதியில் நின்ற சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் பொதுமக்களின் குடியிருப்புக்கள் சேதமாகின.'

## யாழ். மாவட்ட எம். பிக்களில் அரசாங்கத் தரப்பு அக்கறை

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்குதென்னிலங்கையில் நெருக்கடி வலுவடைந்து வருவதன் காரணமாக யாழ். மாவட்ட சுயேச்சை எம். பி. களின் நிலைப்பாடு குறித்து மிகுந்த அக்கறை காட்டுவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கொழும்பில் தங்கியுள்ள கலைக்கப்பட்டஈரோஸ் உறுப்பினர்கள் சிலர் யாழ். மாவட்ட எம்.பி.களின் இடத்தை நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட போதும் அரசியல் அமைப்புச் சட்டம் அதற்கு இடம் கொடுக்க மாட்டாது என்பதனால் சுயேச்சைக் குழுத் தலைவர் எட்வேட். செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் முடிவே முக்கியமானதெனக் கருதப்படுகின்றது.

இந்நிலையாலேயே அரசாங்கத் தரப்பினர் யாழ். மாவட்ட சுயேச்சைக் குழுவினர் விவகாரத்தில் அக்கறைகாட்டுவதாகத் தெரியவருகின்றது.

## ஆயுதம் தாங்கிப் போராடுவது தமிழ் மக்களின் கடமை -ரூபன்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் இனத்தை அழிப்பதன்மூலம் தமிழ் மொழியையும் அழித்து தமிழர் தாயகத்தை முழுமையாகக் கைப்பற்றி சிங்கள, முஸ்லிம் குடியேற்றத்தை எமது தாயகத்தில் நடாத்தி தமிழர் தாயகத்தையும் அழிப்பதற்கு சிறிலங்கா அரசு தீவிரமாக முயன்று வருகின்றது இவ்வாறான முயற்சிகளை முறியடிப்பதற்கு நாம் போராடத் தவறினால் தற்பொழுது தென்தமிழீழத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவல நிலை வட தமிழீழத்திற்கும் பரவுவதை தடுக்க முடியாமல் போய்விடும்'' இவ்வாறு தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் நடைபெற்ற ( 4 ஆம் பக்கம் பார்க்க)

## சமுகம் தரவும்

யாழ்ப்பாண மாநகர சபை தவிர்ந்த ஏனைய இடங்களில் வசிக்கும் சகல சட்டத்தரணிகளையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று (27-09-91) (4 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் முன்றலில் உண்ணா நோன்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவையொட்டி நேற்றைய தினம் நல்... தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந்த உண்ணாவிரதத்தில் (4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளபதி உயிர் ஊசலாடுகிறது

(கொழும்பு)

ஊர்காவற்றுறை கடற்பரப்பில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த வடபிராந்தியகடற்படை தளபதி ஏச். ஆர். அமரவீராவின் ... கரமானதாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் ஏழு கடற்படையினர் கொல்லப்பட்டதும் இவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டதும் ...

## சிறிலங்கா பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பத்தின் மத்தியில்

வசந்தகுமார், உடுத்துறை), ★ சகிகிதா (வசந்தகுமாரி நடராசா, நவாலி வடக்கு), ★ திபாகர் (மாணிக்கம்

★ சுமங்கலி (மலிலிகா விஜயரட்ணம், இயக்கச்சி), ★ ரஜினி (குயின்பத்மா

4ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டாவுக்கு மகேந்திரராசா அழைப்பு

(யாழ்ப்பாணம்)

'ஒரு உருப்படியான தீர்வுத்திட்டத்தை நோக்கிய கருத்துப்பரிமாற்றங்களும், விளக்கங்களும் கடிதமூலம் வைத்துக்கொள்வது நடைமுறைக்குச் சிரமமானது. அத்துடன் சமாதானப்பேச்சுக்கள் தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல. நேரடியாகச் சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே சிறந்த வழிமுறையாகும்! இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, உல்லாசப் பிரயாண, கைத்தொழிற்றுறை அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமரசப் பேச்சிற்கான அடிப்படை அம்சங்கள் குறித்து தலைவர் பிரபாகரனுக்கு அமைச்சர் தொண்டமான் அனுப்பிய கடிதத்திற்கு பதிலளிககும் முகமாகவே இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

திரு. மகேந்திரராசா அனுப்பிய கடிதத்தின் முழு விபரமும் வருமாறு.

அன்புடையீர்!

எமது இயக்கத் தலைவர் திரு. வே பிரபாகரனுக்கு நீங்கள் 27-08-1991-இல் அனுப்பிய கடிதத்தைப் பெற்றுக் கொண்டோம். கடிதம் கிடைக்கப்பெற்ற தகவலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக உங்களுக்கு அறியத் தந்தோம். நீங்கள் இந்தியா சென்றிருந்ததால் உடன்பதில் எழுதுவது தாமதமாகியது.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் முன்வைத்த யோசனைகளை நாம் கருத்தில் எடுத்துக் கொண்டோம். அரசியல் தீர்வு குறித்து எமது இயக்கத்தின் கருத்துக்களையும் கேட்டிருந்தீர்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா பாராளுமன்றத்தில்

# கூச்சல், குழப்பத்தின் மத்தியில் பிரேமதாசா ஆவேசமாக உரை

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரின் முதலாவது கூட்டம் நேற்றுக்காலை ஆரம்பமானபோது பாராளுமன்றமரபின்படி அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் அறிவிக்கும் முகமாக ஜனாதிபதி ஆர் பிரேமதாசா உரை நிகழ்த்த ஆரம்பித்தார். அப்போது ஜனாதிபதியைத் திட்டமிட்டு அவமானப்படுத்தும் நோக்கத்துடன் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டு குழப்பத்தை ஏற்படுத்தினர்.

ஜனாதிபதி பிரேமதாசா உரை நிகழ்த்தியபோது "வெட்கம் வெட்கம், யோக்கர், பைத்தியக்காரா" என மிகவும் தரக்குறைவான வார்த்தைகளையும், கோஷங்களையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து உணர்ச்சி வயப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா தானும் உரத்த குரலில் ஆக்ரோசமாகப் பேசியதுடன் எதிர் தரப்பினருக்குச் சவால்களையும் விடுத்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருந்ததோடு, ஜனாதிபதியைஉற்சாகப்படுத்தும் நோக்கத்துடன் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

ஒருகட்டத்தில் எதிர்க்கட்சியினரின் தரக்குறைவான

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்விற்கு தயாராக உள்ளோம்

## - பிரேமதாசா

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு அரசியல் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கம் இன்னமும் தயாராக உள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இவ்வாறு சிறிலங்காவின் இரண்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரைசம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும், மனிதப் பிரச்சனைக்கு கலந்துரையாடல் மூலமே தீர்வு காணலாமேயன்றி எதிர்த்துப் போராடுவதனால்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்கு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் நின்ற சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் பொதுமக்களின் குடியிருப்புக்கள் சேதமாகின.

# யாழ். மாவட்ட எம். பிக்களில் அரசாங்கத் தரப்பு அக்கறை

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்குதென்னிலங்கையில் நெருக்கடி வலுவடைந்து வருவதன் காரணமாக யாழ். மாவட்ட சுயேச்சை எம். பி. களின் நிலைப்பாடு குறித்து மிகுந்த அக்கறை காட்டுவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கொழும்பில் தங்கியுள்ள கலைக்கப்பட்டஈரோஸ் உறுப்பினர்கள் சிலர் யாழ். மாவட்ட எம். பி. களின் இடத்தை நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட போதும் அரசியல் அமைப்புச் சட்டம் அதற்கு இடம் கொடுக்க மாட்டாது என்பதனால் சுயேச்சைக் குழுத் தலைவர் எட்வேட். செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் முடிவே முக்கியமானதெனக் கருதப்படுகின்றது.

இந்நிலையாலேயே அரசாங்கத் தரப்பினர் யாழ். மாவட்ட சுயேச்சைக் குழுவினர் விவகாரத்தில் அக்கறைகாட்டுவதாகத் தெரியவருகின்றது.

# ஆயுதம் தாங்கிப் போராடுவது தமிழ் மக்களின் கடமை

## -ரூபன்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் இனத்தை அழிப்பதன்மூலம் தமிழ் மொழியையும் அழித்து தமிழர் தாயகத்தை முழுமையாகக் கைப்பற்றி சிங்கள, முஸ்லிம் குடியேற்றத்தை எமது தாயகத்தில் நடாத்தி தமிழர் தாயகத்தையும் அழிப்பதற்கு சிறிலங்கா அரசு தீவிரமாக முயன்று வருகின்றது. இவ்வாறான முயற்சிகளை முறியடிப்பதற்கு நாம் போராடத் தவறினால் தற்பொழுது தென்தமிழீழத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவலநிலை வட தமிழீழத்திற்கும் பரவுவதை தடுக்க முடியாமல் போய்விடும்" இவ்வாறு தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் நடைபெற்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

## சமுகம் தரவும்

யாழ்ப்பாண மாநகர சபை தவிர்ந்த ஏனைய இடங்களில் வசிக்கும் சகல சட்டத்தரணிகளையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அன்று (27-09-91)

(4ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் முன்றலில் உண்ணா நோன்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவையொட்டி நேற்றைய தினம் நல்லூர் வீதியில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை உண்ணா நோன்பு அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வின் ஆரம்பத்தில் தியாகி திலீபனின் தந்தையார் திரு. இராசையா அவர்கள் தீபம் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து த. வி. பு. வலிகாமம் பொறுப்பாளர் திரு ஐயர் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந்த உண்ணாவிரதத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படைத் தளபதி உயிர் ஊசலாடுகிறது

(கொழும்பு)

ஊர்காவற்துறை கடற்பரப்பில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த வடபிராந்தியகடற்படை தளபதி ஏச். ஆர். அமரவீராவின் உடல் நிலை மிகவும் அபாயகரமானதாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் ஏழு கடற்படையினர் கொல்லப்பட்டதும் இவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

# குடாநாடு எங்கும் திலீபன் நினைவு நாள் நிகழ்ச்சிகள்

தாயக விடுதலைக்காக தியாக மரணமடைந்த தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நிறைவையொட்டி குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் ஊர்தி பவனிகளும், தெருக்கூத்துக்களும், சிரமதான நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டு தினமும் நடைபெற்று வருகின்றது.

★ ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தினர் நேற்று புல்லன் குளம் வீதியில் உள்ள குளம் ஒன்றை தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக சிரமதான மூலம் ஆழப்படுத்தியுள்ளனர். அத்துடன் ஈச்சமோட்டை சனசமூக நிலைய மைதானமும் புனரமைப்பு செய்யப்பட்டது.

(43)

★ உரும்பராய், ஊரெழு, கோப்பாய் ஆகிய பகுதிகளில் தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நிறைவையொட்டி நிலாவெளியில் "திலீபனின் வீரவரலாறு" என்ற பெயரில் தெருக்கூத்து நடைபெற்று வருகிறது: (க)

★ வலிகாமம் மேற்குப் பகுதிகளான வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சுளிபுரம், மூளாய் ஆகிய பகுதிகளில் தியாகி திலீபன் ஞாபகமாக ஊர்தி பவனிகள் நடைபெற்று வருகின்றது ஊர்தியில் வைக்கப்பட்டுள்ள திலீபனின் உரு

(4ஆம் பக்கம் பார்க்க)

# "பிரேமா" பாதுகாப்பிற்கு சாலைகள் மூடப்பட்டன

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்துக்கு செல்லும் பாதையில் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 10.40 மணிக்கு ஆரம்பமாகிய இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி 10.00 மணிக்கு மோட்டார் பவனியில் பாராளுமன்றக் கட்டடத்தை வந்தடைந்தார் என்றும்;

காலிமுக வீதி, காலிவீதி, ஹொட்டன் பிளேஸ், காசில் வீதி, சிறிஜெயவர்த்தனபுர மாவத்தை ஆகிய பாதைகள் காலைமுதல் மூடப்பட்டிருந்தன என்றும், அங்கு இராணுவத்தினர் பலத்த காவலில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புத்திஜீவி தலைமையில் பிரசார செயலகம்

ஜனாதிபதி, ஆர். பிரேமதாசாவுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்காக அதிருப்தியாளர் அவுஸ்திரேலியாவிலிருந்து பல்கலைக் கழகப் புத்திஜீவி ஒருவரைக் கொழும்புக்கு வரவழைத்துள்ளார்கள்.

பிரசாரச் செயலகம் புத்திஜீவியின் தலைமையில் பொல்ஹேன்கொடவில் உள்ள லலித் அத்துலத் முதலியின் சகோதரனின் வீட்டில் அமைக்கப்பட்டுள்ளதாம். ஜனாதிபதி அதிருப்தியாளர்களுக்குச் சாதகமான பதில்களைத் தரக்

(4ஆம் பக்கம் பார்க்க)

"மரணம் ஒரு தடவைதான் வரும். அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்க முடியுமா? இறப்புக்குப் பயந்து இனத்தையே அழியவிட முடியுமா?

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

# போட்டிப் பரீட்சை - 1991

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் எழுதுனர் தரங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் / ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து திறமை அடிப்படையிலும், இன விகிதாசாரப் பிரகாரமும் பொருத்தமானவர்கள் அரசாங்க சேவையிலும், மாகாண சேவையிலும் உள்ள பதவிகளுக்கு அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படுவர். இப்பரீட்சை முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைப் பெறுபேறுகளின் படி எல்லா வெற்றிடங்களையுமோ அல்லது எவற்றையேனும் நிரப்பாது விடும் அதிகாரம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்குண்டு. இந்நியமனங்கள் நிரந்தரமாக்கப் படமாட்டா. நிரந்தர நியமனம் பெற விரும்புவோர் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைய வேண்டும்.

3. முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மாத்திரமே இப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். பின்வரும் ஆவணங்கள் மூலம் விண்ணப்பதாரர் முல்லைத்தீவில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என்று கருதப்படுவர்.

(1) விண்ணப்பதாரரின் பிறப்புச்சான்றிதழின்படி அவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறந்தவரென்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) தேர்தல் இடாப்பில் அவருடைய பெயர் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் க. பொ. த. (சாதாரணம்) அல்லது தே. பொ. க. சா. பரீட்சைக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலையில் கல்வி பயின்று சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தைப் போல் தயாரித்து விண்ணப்பிக்க வேண்டும்.

### 4. தகைமைகள்:-

எண்கணிதம் / கணிதம் / வர்த்தகஎண்கணிதம், மொழி / இலக்கியம் ஆகியவற்றில் திறமைச் சித்திகளையும் உள்ளடக்கி 4 திறமைச்சித்திகளுடன் அல்லது 4 பி தரச் சித்திகளுடன் 6 பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரணதரப்) பரீட்சை / தேசிய பொதுக்கல்வி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தி - மேலே குறிப்பிட்டுள்ள விதத்தில் 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4 பி தரச் சித்திகளுடன் ஒரே தடவையில் 5 க்குக்குறையாத பாடங்களில் சித்தியடைந்த பின் இரண்டாம் தடவையில் 6-ம் பாடத்தில் சித்தியடைந்து பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாய் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியமும் நற்குணமும் உடையவராய் இருத்தல் வேண்டும். வயது: விண்ணப்பமுடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

### 5. பரீட்சைத்திட்டம்:-

அபேட்சகர்கள் பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

(1) மொழித்தேர்ச்சி (ஒன்றரை மணித்தியாலம்) பல்தெரிவு தேர்வுப்புறப் பொருள்சார் வகை வினாத்தாள் ஒன்று, இது தொடர்புடைய மொழித் தேர்ச்சிகளை பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

(II) உளச்சார்புச் சோதனை (ஒன்றரை மணித்தியாலம்) பல்தெரிவுத் தேர்வுப் புறப்பொருள்சார் வகை வினாத்தாள், இது கணித உளச்சார்புகளையும் பொது விவேகத்தையும், பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பொது வினாத்தாள் ஆகும்.

இப் பரீட்சை மூன்று மொழி மூலங்களிலும் நடாத்தப்படும் (தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)

6. பரீட்சைக் கட்டணங்கள்:-

விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக முல்லைத்தீவு அரசாங்க அதிபரென பெற்ற ரூபா 100/-க்கான காசுக்கட்டளையை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

7. சம்பளத் திட்டம்:-

வேலை செய்யும் நாளுக்கு ரூபா 55/20 என்ற வீதத்தில் வேதனமும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

8. விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம்'' என்பதனைக் குறிப்பிடவும்.

அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர்.

பூரண விபரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தில் உள்ள அபேட்சகரின் ஒப்பம் பின்வருவோர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, படைத்தாங்கு சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி, ஆண்டொன்றுக்கு 24 000/- ரூபாவிற்கு குறையாத நிரட்டிய சம்பளம் பெறும் [illegible]

(ஆ) விண்ணப்பம் அனுப்பவேண்டிய முடிவுத் திகதியன்று (15-10-91) உமது வயது:-

வருடம்:- மாதம்:- நாள்:

8. கல்வித்தகைமைகள்:-

(அ) க.பொ.த. (சாதாரணம்) / தே. பொ. க. சான்றிதழ் பரீட்சை-

| பரீட்சையின் பெயர் மாதம், வருடம் | பரீட்சை நிலையம் | பாடம் | தரம் | சுட்டிலக்கம் |
|---|---|---|---|---|
| (1) | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | | |
| (2) | | | | |

(ஆ) க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையின் விபரம்-

| பரீட்சையின் பெயர் மாதம் வருடம் | பாடம் | தரம் | சுட்டிலக்கம் |
|---|---|---|---|
| | 1.<br>2.<br>3.<br>4 | | |

9. பிறந்த இடமும் மாவட்டமும்:-

10. ஆரம்பக் கல்வி தொடக்கம் க பொ. த (சாதாரண) / தே. பொ. க. சா. பரீட்சை வரை கல்விகற்ற பாடசாலையின் பெயர்:-

11. தேர்தல் இடாப்பில் விண்ணப்பதாரரின் பெயர் பதியப்பட்டுள்ளதாயின் அத்தொகுதியின் பெயர்:-

12. ஏனைய தகைமைகள்:-

13. நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காக உமக்குக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? ஆம் / இல்லை ஆம் என்றால் விபரங்களைக் குறிப்பிடவும்)

14. விண்ணப்பதாரியின் உறுதிமொழி:-

(அ) எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரையில் இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்று உறுதிப்படுத்துகின்றேன்

(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட விபரங்கள் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் ஆட்சேர்ப்பின் முன் / ஆட்சேர்ப்பின் பின் நான் தகைமையற்றவராக கொள்ளப்படலாம் / சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதை நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சையின் பிரமாணங்களுக்கமைந்து நடக்க நான் இணங்குகின்றேன்.

15. கொடுப்பனவு காசுக்கட்டளை இலக்கம் (காசுக்கட்டளை இணைக்கவும்)

திகதி:- ........................................

விண்ணப்பதாரியின் ஒப்பம்

விண்ணப்பதாரியின் ஒப்பம் சம்பந்தமான உறுதிமொழி

இவ்விண்ணப்பத்தை அனுப்பும் .............................................. என்பவரைத் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும், என் முன்னிலையில் 1991 .................... ஆம் திகதி அவர் இதில் ஒப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:- உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

பதவி:- பதவி முத்திரை.

முகவரி:-

திகதி:-

(B/3181)

## வரி விளம்பரம்


ஜீவிதா

தொழில் நுட்பக்கூடம்

ரி. வி, டெக், றேடியோ, மணிக்கூடு, நிலைவண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் சிறப்பனையாளர்களும், வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும். 'புதிய பழைய பாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (B/3094)


## தொ. நு. கல்லூரியில் தியாகி திலீபனின் நினைவு விழா

தியாகி திலீபனின் 4 ஆம் ஆண்டு நினைவு விழாவும், மாணவரவை அறிமுகவிழாவும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தொழில் நுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளைஞன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் மாணவரவை கலை பண்பாட்டு இலக்கிய பிரிவினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. மேற்படி விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதன் அமைப்பாளர் கேட்டுள்ளார்.

நியாகத்துளி - 10

### தேடினேன்

வாடிய தேகத்தை
வருடிய கைகள்
பேடிபோல் நடுங்கின!
சூடிய மலர்போல்
இருந்தவன் முகத்தில்
தேடினேன் அந்தப்
புன்னகைத் தேனை!

— வாஞ்சிநாதன்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




## நினைவு கூருகின்றோம்!

## 1991 - 09 - 25

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை 10ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட 8 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு பட்டிருப்பு எல்லைக் கிராமத்தில் சிறீலங்கா ஊர்காவற் படையினரால் [illegible]

4. தகைமைகள்:-

எண்கணிதம் / கணிதம் / வர்த்தகக்கணிதம், மொழி / இலக்கியம் ஆகியவற்றில் திறமைச் சித்திகளையும் உள்ளடக்கி 4 திறமைச்சித்திகளுடன் அல்லது 4 பி தரச் சித்திகளுடன் 6 பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரணதரப்) பரீட்சை / தேசிய பொதுக்கல்வி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தி - மேலே குறிப்பிட்டுள்ள விதத்தில் 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4 பி தரச் சித்திகளுடன் ஒரே தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்த பின் இரண்டாம் தடவையில் 6-ம் பாடத்தில் சித்தியடைந்து பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாய் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியமும் நற்குணமும் உடையவராய் இருத்தல் வேண்டும். வயது: விண்ணப்பமுடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. பரீட்சைத்திட்டம்:-

அபேட்சகர்கள் பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

(I) மொழித்தேர்ச்சி (ஒன்றரை மணித்தியாலம்) பல்விருப்பு தேர்வுப்புறப் பெருங்சார் வகை வினாத்தாள் ஒன்று, இது தொடர்புடைய மொழித் தேர்ச்சிகளை பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

(II) உளச்சார்புச் சோதனை (ஒன்றரை மணித்தியாலம்) பல்விருப்புத் தேர்வுப் புறப்பொருள்சார் வகை வினாத்தாள், இது கணித உளச்சார்புகளையும் பொது விவேகத்தையும், பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பொது வினாத்தாள் ஆகும்.

இப் பரீட்சை மூன்று மொழி மூலங்களிலும் நடாத்தப்படும் (தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)

6. பரீட்சைக் கட்டணங்கள்:-

விண்ணப்பகாரர் பரீட்சைக் கட்டணமாக முல்லைத்தீவு அரசாங்க அதிபரெனப் பெற்ற ரூபா 100/-க்கான காசுக்கட்டளையை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

7. சம்பளத் திட்டம்:-

வேலை செய்யும் நாளுக்கு ரூபா 55/20 என்ற வீதத்தில் வேதனமும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

8. விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம்" என்பதனைக் குறிப்பிடவும்.

அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர்.

பூரண விபரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தில் உள்ள அபேட்சகரின் ஒப்பம் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, படைத்தாங்கு சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி, ஆண்டொன்றுக்கு 24 000/- ரூபாவிற்கு குறையாத இரட்டிய சம்பளம் பெறுபவரும் அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவருமானவொருவர்

9. விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு 1991 ஒக்ரோபர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க அதிபர் / மாவட்ட ஆணையாளர்,
கச்சேரி,
முல்லைத்தீவு.

பரீட்சைத் திகதி பின்னர் பத்திரிகைமூலம் அறிவிக்கப்படும். அரசாங்க அதிபரின் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் கொடுக்கப்படாத எந்த விடயமும் நியமிப்பு அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும்.

இ. தர்மகுலசிங்கம்,
முல்லைத்தீவு அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுநர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை - 1991

1. (I) முழுப்பெயர்:-
   (II) முதலெழுத்துக்களுடன் பெயர்:-
   (திரு / திருமதி / செல்வி)
2. நிரந்தர முகவரி:-
3. பால்:- (ஆண் / பெண்)
4. நீர் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி:-
   (தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)
5. இனம்:-
   (இலங்கைத் தமிழர் / சிங்களவர் / முஸ்லீம்கள் / இந்தியத்தமிழர் / பறங்கியர் / மலாயர் / பிறர்)
6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
7. (அ) பிறந்த திகதி:-
   வருடம்:- மாதம்:- திகதி:-

10. ...
    பரீட்சை வரை கல்விகற்ற பாடசாலையின் பெயர்:-
11. தேர்தல் இடாப்பில் விண்ணப்பதாரரின் பெயர் பதியப்பட்டுள்ளதாயின் அத்தொகுதியின் பெயர்:-
12. ஏனைய தகைமைகள்:-
13. நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காக உமக்குக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? ஆம் / இல்லை ஆம் என்றால் விபரங்களைக் குறிப்பிடவும்)
14. விண்ணப்பதாரியின் உறுதிமொழி:-
    (அ) எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரையில் இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்று உறுதிப்படுத்துகின்றேன்
    (ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட விபரங்கள் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் ஆட்சேர்ப்பின் முன் / ஆட்சேர்ப்பின் பின் நான் தகைமையற்றவராக கொள்ளப்படலாம் / சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதை நான் அறிவேன்.
    (இ) இப்பரீட்சையின் பிரமாணங்களுக்கமைந்து நடக்க நான் இணங்குகின்றேன்.
15. கொடுப்பனவு காசுக்கட்டளை இலக்கம் (காசுக்கட்டளை இணைக்கவும்)

திகதி:- ............................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

விண்ணப்பதாரியின் ஒப்பம் சம்பந்தமான உறுதிமொழி

இவ்விண்ணப்பத்தை அனுப்பும் ............................ என்பவரைத் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும், என் முன்னிலையில் 1991 .................. ஆம் திகதி அவர் இதில் ஒப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

............................
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-
பதவி:-
முகவரி:-
திகதி:-

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
பதவி முத்திரை.

(B/3181)

...

இளைஞன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் மாணவரவை கலை பண்பாட்டு இலக்கிய பிரிவினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. மேற்படி விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதன் அமைப்பாளர் கேட்டுள்ளார்.

நியாகத்துளி - 10

### தேடினேன்

வாடிய தேகத்தை
வருடிய கைகள்
பேடிபோல் நடுங்கின!
சூடிய மலர்போல்
இருந்தவன் முகத்தில்
தேடினேன் அந்தப்
புன்னகைத் தேனை!

— வாஞ்சிநாதன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தவக்குமார்
(சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன்)

தாயின் மடியில் 25 . 08 . 1973
தமிழீழமண்ணில் 25 . 09 . 1990
திதி 13 . 10 . 1991

திங்களைப் போன்ற செவ்வல்
தீந்தமிழ் மண்ணை மீட்க
பொங்கு மாருதியைப் போல்
புறப்பட்ட வீர வேங்கை
தவக்குமார் நாமம் பூண்ட
ஜனார்த்தனன் என்ற சங்கை
பாவற்குள மோதல் தன்னில்
பகைவனைச் சாடி மாய்ந்தான்
உன்னவர் துயரைக் காக்க
ஜனார்த்தனா ஓடி வாராயோ!

25-09-1990 அன்று மரணித்த சகபோராளிகள் கோபிநாத், பரதன் ஆகியோருக்கும் எமது நினைவு அஞ்சலிகள்.

பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, அண்ணா, உறவினர்
நண்பர்கள்.

(B-3175)

## நினைவு கூருகின்றோம்!

### 1991 - 09 - 25

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை 10ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட 8 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு பட்டிகுப்பு எல்லைக் கிராமத்தில் சிறீலங்கா ஊர்காவற் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட பெண்கள் உட்பட எட்டுத் தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

பண்டத்தரிப்பில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று பொதுமக்கள்

1990 ஆம் ஆண்டு பாவற்குளம் முதலாம் யூனிற் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

தவக்குமார் / ஜெனா (சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன் - ஏழாலை கிழக்கு)
கோபிநாத் (பாவற்குளம்)
பரதன் (ஓமந்தை)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரமரணமெய்திய சிசிலியா (யூடினா பகீரதகுமார் - மருத்துவ ஜனவீதி, மன்னார்)

மட்டக்களப்பில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு காணாமற்போன தச்சுத் தொழிலாளிகளான இரு தமிழர்கள்

அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில் பகுதிகளில் கைதுசெய்யப்பட்டு பின்னர் 40ஆம் கட்டைக் கடலில் சாக்கில் துண்டிக்கப்பட்ட தலைகளுடன் கிடந்த 10 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3179)

### சிந்தனைக்கு

தேவையற்ற செயல்களை மட்டுமல்ல
தேவையற்ற சிந்தனைகளையும்
ஒரு மனிதன் விலக்க வேண்டும்.
தேவையற்ற சிந்தனைகளை
விலக்கிவிட்டால், தேவையற்ற
செயல்கள் தொடரா.

— மார்க்கஸ் அரேலியஸ்

ஈழநாதம்

31, [illegible] வீதி, யாழ்ப்பாணம் 25-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் [illegible]-2839 நிர்வாகபீடம் [illegible]
[illegible]

# சிறிலங்கா அரசியலில் பலம் பெறும் இராணுவம்

விடுதலைப் புலிகளுக்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும், இதர ஆயுதங்களையும் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தபோது வழங்கினார் என்ற எதிர்க் கட்சியினரதும், அதிருப்தியாளர்களதும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை, நகைப்பிற்கிடமானவை என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஆனால், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விவகாரத்தை விட சிறிலங்கா இராணுவம் அரசியலில் தம்மை உறுதிப்படுத்தி வரும் விவகாரமே முக்கியமானதாகத் தெரிகின்றது. இராணுவத்தினரின் செயற்பாடுகள் சுதந்திரமானதாக இருக்க வேண்டும் எனவும், இராணுவத்தினர் மீது மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் எனவும், ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் அது அரசியலில் உறுதியாகக் காலடி எடுத்து வைக்கத் தொடங்கி விட்டதையே காட்டுகிறது. இராணுவத்தினரின் இந்தச் செயற்பாட்டை தென்னிலங்கை அரசியல்வாதிகளும் தெரிந்தும் தெரியாமலும் கண்டும் காணாமலும் இருந்து வருகின்றனர்.

தமிழர் தேசிய இனப்பிரச்சினை தீவிரமடைய அடைய அதனை அடக்கி ஒடுக்க வளர்த்தெடுக்கப்பட்ட இராணுவத்திற்கு அரசாங்கம் பெரும் ஒதுக்கீடுகளையும், சலுகைகளையும் வழங்கி வந்த வேளையில் கட்டுப்பாடு எதையும் விதிக்கவில்லை. சிங்கள, பௌத்த பேரினவாதத்தையே அரசியல்வாதிகள் தமது முழு இலட்சியமாகக் கொண்டிருந்தமையால் தமிழருக்கெதிரான எந்தவகையான ஒடுக்குமுறை நடவடிக்கையையும் அவர்கள் அனுமதித்தார்கள். சிறிலங்கா அரசாங்கத்தின் ஆள்புல அதிகாரம் சுருங்கிச் செல்லச் செல்ல இராணுவத்தினருக்குரிய அதிகாரங்களும் அதிகரித்தன. மேலும் 1988, 1989 இல் தென்னிலங்கையில் அரசாங்கத்திற்கெதிரான கிளர்ச்சியை அடக்கவும் இராணுவத்திற்கு அபரிமிதமான அதிகாரங்களை வழங்கின. இதனால், இராணுவத்தினர் மேலும் பலம் பெற்றனர். கேட்பார் அற்ற நிலையை அடைந்தனர் தமக்குக் கிடைத்த அதிகாரத்தை நேர்த்தியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இதனால் அண்மைக் காலத்தில் சில அரசியல் நடவடிக்கைகளுக்குக் கூட இராணுவம் தடையாக இருந்து வந்துள்ளது. தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் சில அரசியல்வாதிகள் சமாதான முயற்சியில் ஈடுபட முனைந்த போது கூட இராணுவத் தீர்விற்கான கால நீடிப்புக் கோரிக்கையால் அவற்றைத் தடுத்துள்ளது.

# அமெ. பழைய கருத்து வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளக் கூடாது

--நரசிம்மராவ்

(டில்லி)

''ஒவ்வொரு நாட்டையும் அதன் கொள்கையின் அடிப்படையில் நோக்க வேண்டுமே அல்லாமல் ஏதாவது ஒரு கட்டத்தில் அமெரிக்காவுடன் இருந்த கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் நோக்கக் கூடாது'' என்று இந்திய பிரதம மந்திரி நரசிம்மராவ் அமெரிக்க சஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

''பரஸ்பர நல்லுறவு நம்பிக்கை என்ற அடிப்படையில் இப்போதுள்ள உறவு சோவியத் யூனியனுடன் தொடரும்'' என்றும் அவர் அந்த சஞ்சிகைக்கு பேட்டி அளிக்கும் போது குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் தொடர்ந்தும் இந்தியாவில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஊக்குவித்து வருமானால் பாகிஸ்தானை இந்தியா தக்க விதத்தில் சந்திக்கும் என்றும் கூறினார்.

அணு ஆயுதம் சம்பந்தப்பட்ட விடயத்தில் அவர் பேசும் போது அணு ஆயுதம் பரவும் விடயத்தை தடுக்கும் எந்த ஒரு ஒப்பந்தத்திலும் இந்தியா கைச்சாத்திடப் போவதில்லை. இதுதொடர்பாக இந்தியாவின் விஷயத்தில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஆசிய நாடுகளுக்காக பி.பி.ஸியின் ரி.வி.ஒளிபரப்பு

(லண்டன்)

வருகின்ற டிசம்பர் மாதம் ஆசியாவிற்கான 24 மணிநேர டெலிவிஷன் செய்தி ஒளிபரப்பை மேற்கொள்ள பி. பி. ஸி திட்டமிட்டுள்ளது.

பி. பி. ஸியின் உலக சேவை டெலிவிஷன் முழு நேர ஆசிய செய்தித் தகவல் அலைவரிசை மூலம் செய்மதியின் உதவியுடன் இந்த ஒளிபரப்பை மேற்கொள்ளும்.

ஹொங்கொங் ஹிக்கியன் கம்பெனி இந்தச் செய்மதியை இயக்குகிறது. 38 நாடுகளிலுள்ள 270 கோடி மக்களுக்கு ஆசிய செய்திகள் கிடைக்கும்.

அக்டோபர் மாதம் 24 மணி நேர அறிமுக சேவையைத் தொடர்ந்து நவம்பர் 15 ஆம் திகதிமுதல் 24 மணிநேர ஆசிய அலைவரிசை ஒளிபரப்பு ஆரம்பமாகும்,

# ஈராக்மீதான தடையை நீக்க ஐ. நா. விடம் இந். கோரிக்கை

(டில்லி)

ஈராக்கின் அப்பாவி மக்களின் உணவு மற்றும், மருந்துத் தேவைகளை சமாளிக்க, ஈராக் மீதான பொருளாதார தடைகளை தளர்த்த வேண்டுமென்று ஐ. நா. சபையிடம் இந்தியா கேட்டுள்ளது.

புதுடில்லியில் நடைபெறும் கொமன்வெல்த்பாராளுமன்ற மாநாட்டின் முதல் கூட்டத்தில் பேசிய இந்தியப் பிரதிநிதிக் குழுவின் தலைவர் உலாம் நபி ஆசாத் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

எந்த நாடும், ஆக்கிரமிப்புச் செய்வதை ஏற்க இயலாது என்றாலும் ஈராக்கிய மக்களின் துன்பங்களை மனிதாபிமான முறையில் அணுக வேண்டும் என்றும், இந்தத் தடை நடவடிக்கைகளினால் ஏற்படக் கூடிய விளைவுகளை ஐ. நா. சபை கருத்திற் கொள்ள வேண்டும் என்றும் ஆசாத் கேட்டுக் கொண்டார்.

# அமைச்சர் சிதம்பரம் அமெரிக்கா பயணம்

(டில்லி)

இந்திய - அமெரிக்க வர்த்தகத் தொடர்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வர்த்தகத்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் அமெரிக்கா சென்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா சென்ற ப. சிதம்பரம் கடன் உதவி மற்றும் சகல வர்த்தகப் பிரச்சினைகள் குறித்தும் அமெரிக்க வர்த்தகத் துறையினருடனும் பேச்சு வார்த்தை நடத்துவார் என உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்தவாரம் அமெரிக்கப் பாராளுமன்றம் இந்தியாவிற்கு எதிரான பிரஸ்லர் சட்டத்தை விலக்கியதைத் தொடர்ந்து ப. சிதம்பரத்தின் இந்தப் பயணம் இடம்பெறுகிறது.

# சதாமை கண்காணிப்பதே சி.ஐ.ஏயின் பணி

(வாஷிங்டன்)

ஈராக்கியஜனாதிபதி சதாம் ஹுசைன் பதவியில் இருக்கும் வரை ஈராக்கே அமெரிக்க உளவுப்பிரிவின் பிரதான இலக்காக இருக்கும். சதாம் ஹுசைன் தொடர்ந்தும் ஏமாற்றி வரும் ஒருவராக இருக்கின்றார் என அமெரிக்கஉளவு நிறுவனமான சி ஐ ஏ தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ரொபர்ட்கேட்ஸ் கூறினார்.

வளைகுடா யுத்தத்தின் மூலம் சதாம் எந்தவகைய பாடத்தையும் படிக்காதது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஈராக் வீரர்களின் கொலை குறித்து அமெரிக்காவிடம் செ. சங்கம் விபரம் கோரியுள்ளது

(ஜெனீவா)

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்க 'ராங்கு' களால் ஆயிரக் கணக்கான ஈராக்கிய வீரர்கள் உயிருடன் புதையுண்டு இருப்பதான அறிக்கைகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் வாஷிங்டனிடம் விபரக் கோரியுள்ளது.

ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தூதரிடம் செஞ்சிலுவைச் சங்கம் இந்த விபரத்தைக் கோரியுள்ளது என்றும், ஈராக்கின் வேண்டுகோளின் படியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

உழவுத் தகடுகள் பூட்டப்பட்ட அமெரிக்க டாங்கிகள் யுத்தத்தின் போது ஈராக்கிய பதுங்கு குழிகளுக்குள் இருந்த வீரர்களை உயிருடன் மண்ணில் புதைத்தவாறு முன்னேறிச் சென்றன என்று செய்திகள் வந்தது தெரிந்ததே.

இச் செயல ஜெனீவா யுத்த விதிகளை மீறிய செயல் என ஈராக்கும் ஜெனீவா பங்குத்த விதிகளுக்கு உட்பட்டது இது வென்று அமெரிக்காவும் தெரிவிக்கின்றன.

# ஆந்திராவில் 9 பேர் மரணம்

(புதுடில்லி)

ஆந்திராவில் பெய்த பெருமழையால் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். அந்த மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு காரணமாக வீடுவாசல்களை இழந்த ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதைத்தொடர்ந்து மீட்பு வேலைகள் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கட்டுத்துப்பாக்கியால் மனைவியை கணவர் தாக்கினார்

[யாழ்ப்பாணம்]

ஆத்திரம் கொண்ட கணவர் ஒருவர் கட்டுத்துப்பாக்கி கொண்டு தனது மனைவியை சுட்டதில் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தின் போது மீசாலையைச் சேர்ந்த சி, மங்கனேஸ்வரி (வயது 32) என்ற தனது மனைவி மீது சிவலிங்கம் என்பவர் கட்டுத்துப்பாக்கியால்சுட்டதில் அவரி இரு தொடையிலும் பலத்த காயமடைந்திருக்கின்றார். இவர் தற்பொழுது யாழ். போதனா மருத்துவமனையில்

# ஆர்மேனியாவும் சுதந்திரப்பிரகடனம்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றான ஆர்மே

# கிராமப்புறம் செல்ல ஆசிரியருக்குப் பணிப்பு

வவுனியா கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகள் பலவற்றில் கல்வி கற்பித்து சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளு அன்றி இடம்பெயர்ந்த [illegible] டாய அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

ஆசிரியர்கள் இல்லாத நிலையில் வவுனியா மாவட்டத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் [illegible]

அதிருப்தியையும் குற்றச்சாட்டுகளை இதற்கான வை, நகைப்பிற்கிடமானவை என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஆனால், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விவகாரத்தை விட சிறிலங்கா இராணுவம் அரசியலில் தம்மை உறுதிப்படுத்தி வரும் விவகாரமே முக்கியமானதாகத் தெரிகின்றது. இராணுவத்தினரின் செயற்பாடுகள் சுதந்திரமானதாக இருக்க வேண்டும் எனவும், இராணுவத்தினர் மீது மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் எனவும், ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் அது அரசியலில் உறுதியாகக் காலடி எடுத்து வைக்கத் தொடங்கி விட்டதையே காட்டுகிறது. இராணுவத்தினரின் இந்தச் செயற்பாட்டை தென்னிலங்கை அரசியல்வாதிகளும் தெரிந்தும் தெரியாமலும் கண்டும் காணாமலும் இருந்து வருகின்றனர்.

தமிழர் தேசிய இனநெருக்கடி தீவிரமடைய அடைய அதனை அடக்கி ஒடுக்க வளர்த்தெடுக்கப்பட்ட இராணுவத்திற்கு அரசாங்கம் பெரும் ஒதுக்கீடுகளையும், சலுகைகளையும் வழங்கி வந்த வேளையில் கட்டுப்பாடு எதையும் விதிக்கவில்லை. சிங்கள, பௌத்த பேரினவாதத்தையே அரசியல்வாதிகள் தமது முழு இலட்சியமாகக் கொண்டிருந்தமையால் தமிழருக்கெதிரான எந்தவகையான ஒடுக்குமுறை நடவடிக்கையையும் அவர்கள் அனுமதித்தார்கள். சிறிலங்கா அரசாங்கத்தின் ஆளுமை அதிகாரம் சுருங்கிச் செல்லச் செல்ல இராணுவத்தினருக்குரிய அதிகாரங்களும் அதிகரித்தன. மேலும் 1988, 1989இல் தென்னிலங்கையில் அரசாங்கத்திற்கெதிரான கிளர்ச்சியை அடக்கவும் இராணுவத்திற்கு அபரிமிதமான அதிகாரங்களை வழங்கின. இதனால், இராணுவத்தினர் மேலும் பலம் பெற்றனர். கேட்பார் அற்ற நிலையை அடைந்தனர் தமக்குக் கிடைத்த அதிகாரத்தை நேர்த்தியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இதனால் அண்மைக் காலத்தில் சில அரசியல் நடவடிக்கைகளுக்குக் கூட இராணுவம் இடையூறாக இருந்து வந்துள்ளது. தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் சில அரசியல்வாதிகள் சமாதான முயற்சியில் ஈடுபட முனைந்த போது கூட இராணுவத் தீர்விற்கான கால நீடிப்புக் கோரிக்கையால் அவற்றைத் தடுத்துள்ளது.

மேலும் விடுதலைப் புலிகளுடன் இறுதி வரையுக்கும் தொடரும் என்ற சிறிலங்கா இராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்காவின் அண்மைக்கால அறிவிப்பு சிறிலங்கா இராணுவம் தமிழர் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் அரசியல்வாதிகளைப் புறந்தள்ளி தனது கையில் எடுத்துக் கொண்டதன் வெளிப்பாடாகும். இதன் மூலம், வடக்கு கிழக்கில் நீடித்த போர் நிகழ்வதற்கும் சிறிலங்காவில் தமது செல்வாக்கை நிலை நிறுத்தவும் இராணுவம் முற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

இராணுவத்தினரின் வளர்ச்சியும், செல்வாக்கும் இதுவரை சிறிலங்கா அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த சங்கத்தினரின் நிலையைவிட உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. தற்போதைய அரசியல் நெருக்கடியில் பௌத்த சங்கத்தினரின் நடவடிக்கைகளை பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாக விமர்சனம் செய்யவும், கண்டிக்கவும் முற்படும் அதிருப்தியாளர்களும், எதிர்க் கட்சியினரும் இராணுவத்தினரிடம் வேண்டுதல்கள், கோரிக்கைகள் விடுகின்றனரே ஒழிய அவர்களின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்யவோ கண்டிக்கவோ முன்வரவில்லை. அத்தோடு இராணுவ நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடப் போவதில்லை என்று இராணுவத்தினரைச் சமாதானப்படுத்தியும் உள்ளனர்.

தமது அதிகாரப் போட்டி காரணமாக வளர்த்து விடப்பட்ட இராணுவத்தினரை எதிர்க்க முடியாத அவல நிலையில் சிறிலங்கா அரசியல்வாதிகள் தற்பொழுது உள்ளனர். ஆனால், இது சிறிலங்காவில் மட்டும் நிகழும் புதுமையான ஒரு விவகாரம் அல்ல. தேவைக்கதிகமாக இராணுவத்தினரின் பலமும் அதிகரிக்கும் போது சகல நாடுகளிலும் வழமையாக நிகழ்வதொன்று தான். இதனைப் புரியாது இராணுவத்தை வளர்த்து விட்ட அரசியல்வாதிகள்தான் இதற்கு வருந்த வேண்டி வரும்.

---

மூலம் செய்மதியின் உதவியுடன் இந்த ஒளிபரப்பை மேற்கொள்ளும்.

ஹொங்கொங் ஹிச்லியன் கம்பெனி இந்தச் செய்மதியை இயக்குகிறது. 38 நாடுகளிலுள்ள 270 கோடி மக்களுக்கு ஆசிய செய்திகள் கிடைக்கும்.

அக்டோபர் மாதம் 24 மணி நேர அறிமுக சேவையைத் தொடர்ந்து நவம்பர் 15ஆம்

இந்திய - அமெரிக்க வர்த்தகத் தொடர்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வர்த்தகத்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் அமெரிக்கா சென்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா சென்ற ப. சிதம்பரம் கடன் உதவி மற்றும் சகல வர்த்தகப் பிரச்சினைகள் குறித்தும் அமெரிக்க

...வார் என உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்தவாரம் அமெரிக்கப் பாராளுமன்றம் இந்தியாவிற்கு எதிரான பிரஸ்லர் சட்டத்தை விலக்கியதைத் தொடர்ந்து ப. சிதம்பரத்தின் இந்தப் பயணம் இடம் பெறுகிறது.

## ஈராக் வீரர்களின் கொலை குறித்து

## அமெரிக்காவிடம் செ. சங்கம் விபரம் கோரியுள்ளது

(ஜெனீவா)

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்க 'ராங்கு'களால் ஆயிரக் கணக்கான ஈராக்கிய வீரர்கள் உயிருடன் புதையுண்டு இருப்பதான அறிக்கைகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் வாஷிங்டனிடம் விபரம் கோரியுள்ளது.

ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தூதரிடம் செஞ்சிலுவைச் சங்கம் இந்த விபரத்தைக் கோரியுள்ளது என்றும், ஈராக்கின் வேண்டுகோளின் படியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

உழவுத் தகடுகள் பூட்டப்பட்ட அமெரிக்க டாங்கிகள் யுத்தத்தின் போது ஈராக்கிய பதுங்கு குழிகளுக்குள் இருந்த வீரர்களை உயிருடன் மண்ணில் புதைத்தவாறு முன்னேறிச் சென்றன என்று செய்திகள் வந்தது தெரிந்ததே.

இச் செயல் ஜெனீவா யுத்த விதிகளை மீறிய செயல் என ஈராக்கும் ஜெனீவா யுத்த விதிகளுக்கு உட்பட்டது இது என்று அமெரிக்காவும் தெரிவிக்கின்றன.

## ஆர்மேனியாவும் சுதந்திரப்பிரகடனம்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றான ஆர்மேனியாவும் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளது.

ஆர்மேனியப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் இந்தப் பிரகடனத்தை ஏகமனதாக செய்துள்ளனர் என்று 'டாஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## கிராமப்புறம் செல்ல ஆசிரியருக்குப் பணிப்பு

வவுனியா கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகள் வலயத்தில் கல்வி கற்பித்து சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைக்கு அஞ்சி இடம்பெயர்ந்து நகரப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பித்து வரும் தமிழ் ஆசிரியர்கள் அனைவரையும் மீண்டும் தத்தமது பாடசாலைகளுக்கு மாற்றம் பெற்றுச் செல்லும்படி வவுனியா கல்வித் திணைக்களம் கட்டளை அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

ஆசிரியர்கள் இல்லாத நிலையில் வவுனியா மாவட்டத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் கல்விக் குறைபாடு இருந்து வந்தமை தெரிந்ததே.

இதன் காரணமாக ஆயிரக் கணக்கான மாணவர்கள் பாதிப்படைந்தனர். தற்போது பெற்றோர்களும் சமூக நிறுவனங்களும் வவுனியா கல்வித் திணைக்களத்திடம் புகார் தெரிவித்தமையை அடுத்து கல்வித் திணைக்களம் இம்முடிவு எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் மீண்டும் கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்குச் செல்ல உள்ளனர். (தி)

## மகாவலி 'சி' வலயத்திற்கு

## இரத்தினபுரியிலிருந்து 800 குடும்பங்கள் தெரிவு

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணூறு குடும்பங்கள் விரைவில் மகாவலி 'சி' வலயத்தில் குடியேற்றப்படவுள்ளனர். இக் குடியேற்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கென திட்டம் தொடர்பான நடைமுறைகளை விளக்குவதற்காக காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துக்கோரள கடந்த 17-9-91 அன்று இரத்தினபுரி நகர மண்டபத்திலும், பெல்மதுல்ல கங்கந்த மகா வித்தியாலயத்திலும் இரு விசேட கூட்டங்களை நடத்தினார்.

இதே போல மகாவலி 'பி' (மாதுறுஓயா) வலயத்தில் அநுராதபுரத்தைச் சேர்ந்த 353 குடும்பங்கள் விரைவில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

## பிரயாண ஒழுங்கு செய்ததும் அகதிகள் நாடு திரும்புவர்

(கொழும்பு)

தமிழகத்தில் இருக்கும் இலங்கை அகதிகளுக்கான பிரயாண ஒழுங்குகளை இந்திய அரசாங்கம் பூர்த்தி செய்ததும் அகதிகள் இலங்கை திரும்புவது ஆரம்பமாகும் என்று சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நேரடியாக தமது வீடுகளுக்குச் சென்று குடியேறக் கூடிய அகதிகளே முதலில் அழைத்து வரப்படுவர் என்றும், இவர்கள் வழமையான குடிவரவு நடைமுறைகளின் கீழ் இலங்கை அதிகாரிகளினால் கண்காணிக்கப்பட்டு அவரவர் வீடுகளுக்கு அனுப்பப்படுவர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## ஆந்திராவில் 9 பேர் மரணம்

(புதுடில்லி)

ஆந்திராவில் பெய்த பெருமழையால் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். அந்த மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு காரணமாக வீடுவாசல்களை இழந்த ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மீட்பு வேலைகள் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

...டார்.

## சதாமை கண்காணிப்பதே சி.ஐ.ஏயின் பணி

(வாஷிங்டன்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் பதவியில் இருக்கும் வரை ஈராக்கே அமெரிக்க உளவுப்பிரிவின் பிரதான இலக்காக இருக்கும். சதாம் ஹுசைன் தொடர்ந்தும் ஏமாற்றி வரும் ஒருவராக இருக்கின்றார் என அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ரொபர்ட் கேட்ஸ் கூறினார்.

வளைகுடா யுத்தத்தின் மூலம் சதாம் எத்தகைய பாடத்தையும் படிக்காதது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## கட்டுத்துப்பாக்கியால் மனைவியை கணவர் தாக்கினார்

[யாழ்ப்பாணம்]

ஆத்திரம் கொண்ட கணவர் ஒருவர் கட்டுத்துப்பாக்கி கொண்டு தனது மனைவியை சுட்டதில் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தின் போது மீசாலையைச் சேர்ந்த சி. மங்கனேஸ்வரி (வயது 32) என்ற தனது மனைவி மீது சிவலிங்கம் என்பவர் கட்டுத்துப்பாக்கியால் சுட்டதில் அவரி இரு தொடையிலும் பலத்த காயமடைந்திருக்கின்றார். இவர் தற்பொழுது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். (க)

## 'யுத்' கழகம் வெற்றி பெற்றது

தொதேர்ஸ் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆசிரியரான இ. இராஜேந்திரராஜா அவர்களால் நடாத்தப்பட்ட "லெப்டினன்ட் சேனல் போர்க் வெற்றிக் கிண்ணத்திற்கான 20 ஓவர் கொண்ட 11 பேர் மென்பந்து நொக்கவுட் கிரிக்கெட் போட்டியில் அளவெட்டி யுத் வி. கழகம் நாச்சிமார் கோவிலடி காமாட்சி வி. கழகத்தை 124 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. அளவெட்டி யுத் வி. கழகம் மொத்தம் 140 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் செல்வன் முரளி சிறப்பாக விளையாடி 54 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 1 சிக்சரும் 3 பவுண்டரிகளும் அடங்கும், காமாட்சி வி. க. மொத்தம் 16 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளனர்.

இப்போட்டி நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. கிரிக்கெட் ரசிகர்களும் பெருந்திரளான மக்களும் இப்போட்டியைப் பார்த்தனர். (42)

# நெருக்கடியிலும் தியாகிகளை மக்கள் மறந்து விடவில்லை

(நமது நிருபர்)

எங்கு பார்த்தாலும் தியாகி திலீபனின் உருவப்படங்களும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இதிலிருந்து பொருளாதார நெருக்கடி மற்றும் போக்குவரத்து பிரச்சினைகள் மத்தியிலும் எமது போராட்டத்தையும், உயிர் நீத்த எமது தியாகிகளையும் மக்கள் மறக்கவில்லை என்பதை புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு நேற்று நண்பகல் வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய ஆசிரியர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் திரு பரா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ஒரே தலைமைத்துவத்தின் கீழ் அனைத்து மக்களும், தொழிற்சங்கங்களும் இணைய வேண்டுமென்ற தியாகி திலீபன் கண்ட கனவு நனவாகி வருகின்றது. திலீபன் நினைத்தது போல போராட்டத்தை முன்னெடுக்கும் தொழிற்சங்கமாக இத் தேசிய ஆசிரியர் சங்கம் உருவாகி வருகின்றது, எனக்குறிப்பிட்டதுடன், இறுதி நாளான 26ம் திகதி நான்கு மணிக்கு நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கும், மற்ற நிகழ்ச்சிகளிலும் முழுமையாகப் பங்கேற்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

-பரா

## விடுமுறை

எதிர் வரும் 26-09-1991 அன்று லெப். கேணல் தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி சகல அவசர அனுமதி வழங்கும் காரியாலயங்களுக்கும் விடுமுறை நாளாக போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் அறிவிக்கின்றனர்.

## சமூகம்

காலை ஒன்பது மணிக்கு தமிழீழ காவல் துறையின் யாழ். பிரதேச பணிமனையில் சமூகம் தரும்படி தமிழீழ காவல்துறை கேட்டுள்ளது.

## குடாநாடு

வப்படத்துக்கு மக்கள் மாலை இட்டு மலர்கள் தூவி அஞ்சலி செய்து வருகின்றனர். (க)

★ வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையில் தியாகி திலீபன் ஞாபகமாக சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அதிகாரிகளும், ஊழியர்களும் நேற்று சிரமதான பணியில் ஈடுபட்டனர். (20)

★ தியாகி திலீபனின் ஞாபகமாக மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்று உண்ணாவிரதமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. மண்டைதீவில் மேலும் பல்வேறு பொதுஇடங்களிலும் சிரமதானம் செய்யப்பட்டும் வருகிறது. (88)

★ தியாகி திலீபன் ஞாபகமாக நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

★ கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் நாளை காலை 7-30 மணிக்கு பொது அறிவுப் போட்டி நடைபெற உள்ளது.

★ தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் மாவீரர்களின் உருவப்பட திறப்பு விழாவும் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு அச்சுவேலியில் நடைபெற உள்ளது.

★ யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் தியாகி திலீபனின் ஞாபகமாக தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய கோட்டங்களில் நினைவுக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. (க)

---

**தியாகி திலீபன் 4ஆம் ஆண்டு நினைவாக**

## உண்ணாநோன்பும், நினைவுக்கூட்டமும்

### 2ஆம் நாள் நிகழ்ச்சி நிரல்

காலம்: 25-09-91
இடம்: நல்லூர்
தீபம் ஏற்றுதல்: செல்வி ஜெயா அவர்கள் (பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி, தமிழீழம்)
தேசியக்கொடி ஏற்றுதல்: திரு. செந்தாழன் அவர்கள் (பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்டம்)
உண்ணாநோன்பு: காலை 8.00மணிக்கு ஆரம்பம் மாலை 4.00மணிக்கு நிறைவு பெறும்

மாலை நிகழ்ச்சிகள்

1. நினைவுக் கூட்டம்: 6.00மணிக்கு ஆரம்பம்
2. தலைமையுரை: திரு. இளம்பரிதி (யாழ் மாவட்ட மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர்)
3. நினைவுரைகள்: 1. செல்வி ஆர்த்தி (யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்) 2. திரு கணபதிப்பிள்ளை (ஆசிரியர், நல்லூர் வட்டவைத் தலைவர்) 3. திரு. பாவேந்தன் (வலிகாமம் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)
4. சிறப்புரை: திரு. கரிகாலன் அவர்கள் (விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித்தலைவர் - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)
5. கலை நிகழ்வுகள்: 1. வில்லிசை 2. நாட்டிய நாடகம்

எங்கள் தாயகத்தின் சுதந்திரத்திற்காக தன்தேகத்தையே ஓர் போர்க்களமாக்கிய தியாகி திலீபனை நினைவுகூர குடாநாட்டு மக்களே அணிதிரண்டு வாருங்கள் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

**புலிகள் ஆதரவாளருக்கு எதிராய்**

# பிரித்தானியர் 1911 உருவாக்கிய தேசவிரோதச் சட்டம்

(சென்னை)

தமிழகத்தில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் கூட்டும் கூட்டங்களை தடை செய்வதற்கு 1911ஆம் ஆண்டு பிரித்தானியர் காலத்தில் நடைமுறையில் இருந்த தேசத் துரோகிகளை தடைசெய்யும் சட்டத்தை தமிழக அரசு அமுல் செய்யவுள்ளதாக தமிழக பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் எனக் கோரும் புரட்சிக் குழுக்கள் இலங்கையில் தமிழீழம் ஒன்றை அமைக்க போராடி வரும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தேடி கண்டபடி கூட்டங்களையும், மாநாடுகளையும் நடத்தி வருவதை ஒட்டியே இந்த நடவடிக்கை எடுப்பது அவசியமாகின்றது என்றும்,

வேலூர், அம்பத்தூர், பண்டுருட்டி, திருச்சி, கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கூட்டங்கள் நடைபெற்றது என்றும், இதனை பொலிசார் தடை செய்தனர் என்றும், தேசிய பாதுகாப்புத் தடைச் சட்டத்தின்கீழ் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தமிழக பொலிஸ்துறை தெரிவித்தது.

## புத்திஜீவி

கூடிய வினாக் கொத்துகள் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இப்போது வினாக் கொத்துக்கான பதிலும் அனுப்பி வைக்கப்படுகிறது.

பதில்களின் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டு வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் வழங்கப்படுகின்றன.

## நல்லூர்

பெருந்தொகையான மாணவர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். உண்ணாவிரதத்தின் இறுதியில் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மக்கள் முன்னணி உறுப்பினர் தேவர் அண்ணா உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

## மூன்று நாள்

தியாகராசா, இராசாவின் தோட்டம்),

★ ரூபவதி, (வசந்தி மகாலிங்கம், விநாயகபுரம் முழங்காவில்),

★ நியூட்டன் சோமசேகரம் இராஜயோகம், ஓமந்தை),

ஆகியோரும் இங்களன்று (23-09-91) நடந்த மோதலில்

★ விவேக் (மார்க்கண்டு மகேந்திரன், கரவெட்டி மத்தி),

★ ரூபி (செல்வராணி தம்பையா, வரணி),

★ மனோஜ் (ரத்தினம் சிவகுமார், ஓமந்தை),

★ ரஜிந்தன் (ஆறுமுகம் செல்வரட்ணம், முல்லைத்தீவு), ஆகியோரும் செவ்வாயன்று (24-09-91) நடந்த மோதலில்

★ யசி (சியாமளாதேவி ஆனந்தம், தொண்டமானாறு),

## ஆயுதம்

அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திருகோணமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரூபன் தெரிவித்தார்.

மேலும் அவர் எமது இனத்தையும் தமிழீழத்தாயகத்தையும் மீட்டெடுப்பதற்கு ஆயுதம் தாங்கிப் போராட வேண்டியது எமது தேசமக்கள் அனை

## ஓராண்டு நினைவஞ்சலி



## கூச்சல்

கோஷங்கள் வானொலி ஒலிபரப்பில் எதிரொலித்ததை தொடர்ந்து ஜனாதிபதியின் உரையை வானொலி இடையில் நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று.

மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல சுலோரட்டிகளைப் பாராளுமன்றத்தினுள் கொண்டு வந்திருந்தார்கள். இவற்றில் ஜனாதிபதி குறித்தும் ஆளும் கட்சி குறித்தும் தரக்குறைவாக எழுதப்பட்டிருந்தன.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்குத் தரும் தொந்தரவுக்குத் தான் மன்னிப்புக் கோருவதாக சபாநாயகர் முகமட் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார். இது இளம் உறுப்பினர்களின் குழந்தைத்தனமான செயலாதலால்தான் பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்று ஜனாதிபதி பிரேமதாசா பதிலளித்தார்.

மேலும் இஸ்ரேல் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர்களே இஸ்ரேலின் உளவுப் படையான மொசாட்டின் ஏஜெண்டாகச் செயற்பட்டு தம்மைப் பதவி நீக்கம் செய்ய முயற்சிப்பதாக ஜனாதிபதி பிரேமதாசா குற்றம் சாட்டினார்.

முன்னாள் கல்வி உயர்கல்வி அமைச்சர் அத்துலத்முதலி இஸ்ரேல் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர் என்பதால் அவரை மறைமுகமாகத் தாக்கிய ஜனாதிபதி பிரேமதாசா இந்தக் கருத்தை வெளியிட்டாரெனக் கூறப்படுகிறது.

தன்மீது கொண்டுவரப் பட்டிருக்கும் குற்றச்சாட்டு மனு மீது உடனடி முடிவு காணுமாறு ஜனாதிபதி பிரேமதாசா சபாநாயகரை வலியுறுத்தினார். இதன்மூலம் குற்றச்சாட்டு மனு செயலிழந்துவிடவில்லை என்பதை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஒத்துக் கொண்டுள்ளார் என்றாகிவிட்டது என்று செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

## விரிவுரைகள்

நிலைய உதவிப் பணிப்பாளருக்கு வாய்மூலமாகவே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி யாழ். நிலையத்தை மூடிவிடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இது அமைந்துள்ளதாக கருதப்படுகிறது. (20)

களை தடை செய்வதற்கு 1911ஆம் ஆண்டு பிரித்தானியர் காலத்தில் நடைமுறையில் இருந்த தேசத் துரோகிகளை தடைசெய்யும் சட்டத்தை தமிழக அரசு அமுல் செய்யவுள்ளதாக தமிழக பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் எனக் கோரும் புரட்சிக் குழுக்கள் இலங்கையில் தமிழீழம் ஒன்றை அமைக்க போராடி வரும்

நடத்தி வருவதை ஒட்டியே இந்த நடவடிக்கை எடுப்பது

### புத்திஜீவி

கூடிய வினாக் கொத்துகள் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இப்போது வினாக் கொத்துக்கான பதிலும் அனுப்பி வைக்கப்படுகிறது.

பதில்களின் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டு வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் வழங்கப்படுகின்றன.

## ஓராண்டு நினைவஞ்சலி



பாலத்குளம் நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை பரதன்
### (கந்தசாமி உதயசங்கர்)

தாயின் மடியில் **01 - 12 - 1972**

தமிழீழ மண்ணில் **25 - 09 - 1990**

பள்ளிப் பருவமதில் புலிப் பாசறைக்குச் சென்றாய்
பரதன் என்ற நாமமுடன் களம்பல கண்டாய்
ஈழ மண்ணுக்கு உன்னை உரமாக்கித் தந்தாய்
ஓராண்டு காலம் ஓடி மறைந்ததுவோ பரதா!

110, 2ஆம் யூனிற்
சேமமடுக்குளம்,
சேமமடு.

அப்பா, அம்மா, தங்கை,
தம்பி, உறவினர்கள்.

(B/3182)

கள் நடைபெற்றது என்றும், இதனை பொலிசார் தடை செய்தனர் என்றும், தேசிய பாதுகாப்புத் தடைச் சட்டத்தின்கீழ் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தமிழக பொலிஸ்துறை தெரிவித்தது.

### நல்லூர

பெருந்தொகையான மாணவர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். உண்ணாவிரதத்தின் இறுதியில் மக்கள் உறவு கொள்கைமுன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மக்கள் முன்னணி உறுப்பினர் தேவர் அண்ணா உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

### மூன்று நாள்

தியாகராசா, இராசாவின் தோட்டம்),
★ ரூபவதி, (வசந்தி மகாலிங்கம், விநாயகபுரம் மூழக்காவில்),
★ நியூட்டன் (சோமசேகரம் இராஜேஸ்வரம், ஓமந்தை), ஆகியோரும் திங்களன்று (23-09-91)நடந்த மோதலில்
★ விவேக் (மார்க்கண்டு மகேந்திரன், கரவெட்டி மத்தி),
★ ரூபி (செல்வராணி தம்பையா, வரணி),
★ மனோஜ் (ரத்தினம் சிவகுமார், ஓமந்தை),
★ ரஜிந்தன் (ஆறுமுகம் செல்வரட்ணம், முல்லைத்தீவு), ஆகியோரும் செவ்வாயன்று (24-09-91) நடந்த மோதலில்
★ யசி (சியாமளாதேவி ஆனந்தம், தொண்டமானாறு),
★ குமரன் (திலைனார் உதயகுமரன், வவுனிக்குளம்), ஆகியோரும் வீரமரணமடைந்துள்ளார்கள். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

### கடிதம்

ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை நோக்கிய கருத்துப் பரிமாற்றங்களும், விளக்கங்களும் கடிதமூலம் வைத்துக் கொள்வது நடைமுறைக்கு சிரமமானது. அத்துடன் சமாதானப் பேச்சுக்களை தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல. நேரடியாக சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே சிறந்த வழியாகும்.

ஆகவே, நாங்கள் ஏற்கெனவே விடுத்த அழைப்பை ஏற்று, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து எமது நிலைப்பாட்டை அறிந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். இது சமாதான முயற்சியை மேலெடுத்துச் செல்வதற்கு வாய்ப்பானதாக அமையும் என நாம் கருதுகிறோம்.

இங்ஙனம்,
உங்கள் உண்மையுள்ள
கோ. மகேந்திரராசா
தலைவர்,
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

வாழ் அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நேற்று உண்ணாவிரதமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. மண்டைதீவில் மேலும் பல்வேறு பொதுஇடங்களிலும் சிரமதானம் செய்யப்பட்டும் வருகிறது. (88)

★ தியாகி திலீபன் ஞாபகமாக நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.
★ கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் நாளை காலை 7-30 மணிக்கு பொது அறிவுப் போட்டி நடைபெற உள்ளது.
★ தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் மாவீரர்களின் உருவப்பட திறப்பு விழாவும் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு அச்சுவேலியில் நடைபெற உள்ளது.
★ யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் தியாகி திலீபனின் ஞாபகமாக தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய கோட்டங்களில் நினைவுக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. (க)

### ஆயுதம்

அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திருகோணமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரூபன் தெரிவித்தார்.

மேலும் அவர் எமது இனத்தையும் தமிழீழத் தாயகத்தையும் மீட்டெடுப்பதற்கு ஆயுதம் தாங்கிப் போராட வேண்டியது எமது தேசமக்கள் அனைவரதும் கடமையாகும் என்றும் தெரிவித்தார்.

இந்த அஞ்சலிக் கூட்டத்தின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி மாலினி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. நாவண்ணன் ஆகியோரும் அஞ்சலி உரைநிகழ்த்தினார்கள் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்த இவ்வஞ்சலிக் கூட்டத்தின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (க)

### அரசியல்

அல்ல என்பதைப் பல முறை வலியுறுத்தியுள்ளேன் இந்தச் சூழலிலே கடந்த பல ஆண்டுகளாக நிலவிய சந்தேகங்களையும், தப்பபிப்பிராயங்களையும், அகற்றிவிட்டுச் செயல்பட நாம் உறுதி கொண்டுள்ளோம் என்பதை மீண்டும் வலியுறுத்திக்கூற வேண்டியவனாயுள்ளேன்.தேவையானவாறு விட்டுக் கொடுத்து, சமுதாயத்தில் அனைவரும் நீதியானவாழ்வு வாழச் செய்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். ஐக்கிய இலங்கை ஒன்றை கட்டியெழுப்ப இது ஒன்றே வழியாகும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)

5. கலை நிகழ்வுகள்: 1. வில்லிசை
2. நாட்டிய நாடகம்

எங்கள் தாயகத்தின் சுதந்திரத்திற்காக தன்னைத் தானே ஓர் போர்க்களமாக்கிய தியாகி திலீபனை நினைவுகூர குடாநாட்டு மக்களே அணிதிரண்டு வாருங்கள் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### கூச்சல்

கோஷங்கள் வானொலி உள்வாங்கியில் எதிரொலித்ததை தொடர்ந்து ஜனாதிபதியின் உரையை வானொலி இடையில் நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று.

மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல சுவரொட்டிகளைப் பாராளுமன்றத்தின் உள் கொண்டு வந்திருந்தார்கள். இவற்றில் ஜனாதிபதி குறித்தும் ஆளும் கட்சி குறித்தும் தரக்குறைவாக எழுதப்பட்டிருந்தன.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு தரும் தொந்தரவுக்குத் தான் மன்னிப்புக் கோருவதாக சபாநாயகர் முகமட் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார். இது இளம் உறுப்பினர்களின் குழந்தைத்தனமான செயலாதலால்தான் பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்று ஜனாதிபதி பிரேமதாசா பதிலளித்தார்.

மேலும் இஸ்ரேல் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர்களே இஸ்ரேலின் உளவுப் படையான மொசாட்டின் ஏஜெண்டாகச் செயற்பட்டு தம்மைப் பதவி நீக்கம் செய்ய முயற்சிப்பதாக ஜனாதிபதி பிரேமதாசா குற்றம் சாட்டினார்.

முன்னாள் கல்வி உயர்கல்வி அமைச்சர் அத்துலத்முதலி இஸ்ரேல் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர் என்பதால் அவரை மறைமுகமாகத் தாக்கியே ஜனாதிபதி பிரேமதாசா இந்தக் கருத்தை வெளியிட்டாரெனக் கூறப்படுகிறது.

தன்மீது கொண்டுவரப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு மனு மீது உடனடி முடிவு காணுமாறு ஜனாதிபதிபிரேமதாசா சபாநாயகரை வலியுறுத்தினார். இதன்மூலம் குற்றச்சாட்டு மனு செயலிழந்துவிடவில்லை என்பதை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஒத்துக்கொண்டுள்ளார் என்றாகிவிட்டது என்று செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

### விரிவுரைகள்

நிலைய உதவிப் பணிப்பாளருக்கு வாய்மூலமாகவே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி யாழ். நிலையத்தை மூடிவிடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இது அமைந்துள்ளதாக கருதப்படுகிறது. (20)

## திலீபனின்
## 4ஆம் ஆண்டு நினைவாக

அகிம்சையில் அழியாத புகழ் பெற்றவனே - நீ
உன் ஆசைகள் நிறைவேற முன் மடிந்தாயே
அகிம்சையில் அழியாத நம்பிக்கை கொண்டவனே
உன்தியாகத்தை மக்களுக்கு இப்படியும்உணர்த்தினாயே!

அகிம்சைக்கு முதல் வழி காட்டியவனே - நீ
அகிம்சையை வென்றெடுக்க பாடுபட்டவனே
ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும் - உன்
நினைவலைகள் எம்மை விட்டு என்றும் அகலாது.

ஜனநாயக நாடுகளில் ஒன்றாம் இந்தியா - ஆனால்
அகிம்சைக்கு பொருள் தெரியாத நட்பு நாடாம் இந்தியா
காந்திஜியின் வரிசையில் வந்தவனே - உன்னை
காந்தியாக ஏற்க மறுத்தானே இந்தியா
நாட்டின் விடுதலைக்காக இன்னுயிர் நீத்தாயே. உன்
விடுதலையை ஏற்க மறுத்தானே.

நாங்கள் நம்பியது உண்மைதான் - அதனால்
எங்களுக்கு நல்ல பாடத்தை புகட்டியுள்ளாய்
உன் ஆத்மா சாந்திக்கு நாங்கள் கண்ணீர்
அஞ்சலி செய்கின்றோம்.

(R/1778) "சிவநகர் மக்கள்"

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.